சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/017

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.14-வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968 ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2 எதிரிகள் ஆஜர்.3 ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர்.சரவணபிரியா | மாவட்டம் | : | |
| க/பெ.பெயர் | : | கார்த்திகேயன் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

<u>முதல் விசாரணை</u>:

1. நான் தற்போது கோவை அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவகல்லூரில் இருப்பிட மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.07.2014 மேற்கண்ட மருத்துவமனையில் உள்ள சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் போதகராக பணிபுரிந்த போது ஈரோடு வடக்கு காவல் நிலைய குற்ற எண்.340/14 வழக்கில் சம்மந்தப்பட்ட இறந்து போன அருண்ராம் என்கிற ஆண் பிரேதத்தில் இருந்து ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் சடல கூராய்வு செய்த போது மருத்துவரால் சேகரிக்கப்பட்டிருந்த குரல்வளைய எலும்பினை ஆய்வு செய்வதற்காக எங்களுடைய துறைக்கு ஈரோடு வட்டாச்சியர் மூலமாக அனுப்பட்டது.

2. அந்த குரல்வளை எலும்பினை பரிசோதனை செய்த போது எலும்பை சுற்றி திசுகளுடன் காணப்பட்டது. அந்த திசுக்களை அறுத்து எலும்பை ஆய்வுசெய்த போது அதில் சடலகூராய்வுக்கு முன்பாக எந்த காயமும் ஏற்பட்டிருக்கவில்லை. அதில் எலும்பு முறிவுகளும் காணப்படவில்லை.

குரல்வளை எலும்பு சாதரணமாக காணப்பட்டது. மேலும் 02.07.2014 தேதி அன்று எங்களது அலுவலகத்தில் Forensic Medicine Hyiod Bone No.191/2014 க்குறிய Forensic Medicine Hyiod Bone No.386/14 ல் இறந்த போன அருண்ராமிற்கு அவர் இறப்பதற்கு முன்பு அவருடைய குரல்வளையில் எவ்வித பாதிப்பும் இல்லை என்று என்னால் மருத்துவகருத்துரை சான்றிதழ் கொடுக்கப்பட்டது அது அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது.